# முடநீக்கியல் நிபுணர் மோகன்தாஸுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

சென்னை, ஆகஸ்ட் 24: சென்னை மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநரும் முடநீக்கியல் நிபுணருமான பி.வி.ஏ. மோகன்தாஸுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை (டி.எஸ்சி.) மேற்கு வங்க ஆளுநர் எம்.கே.நாராயணன் வழங்கினார்.

மேற்கு வங்கம் கல்யாணி பல்கலைக்கழகத்தின் சிறப்பு பட்டமளிப்பு விழா சென்னை மியாட் மருத்துவமனை அரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கி ஆளுநர் எம்.கே.நாராயணன் பேசியதாவது:

மேற்கு வங்க மாநிலத்தில் 53 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் கல்யாணி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கடந்த ஆகஸ்ட் 8-ஆம் தேதி நடைபெற்றது. அன்றைய தினம் டாக்டர் மோகன்தாஸ் கலந்துகொண்டு கௌரவ டாக்டர் பட்டத்தை பெற முடியவில்லை. இதையடுத்து சென்னையில் இந்த சிறப்பு பட்டமளிப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்து டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸை கௌரவிக்க முடிவு செய்யப்பட்டது. முடநீக்கியல் மருத்துவத் துறையில் டாக்டர் மோகன்தாஸ் செய்துள்ள சேவை காரணமாக, இந்த கௌரவ டாக்டர் பட்டத்தை (டி.எஸ்சி.) பெறுவதற்கு அவருக்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளன. மேலும் மருத்துவ சேவை காரணமாக நமது நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் மியாட் மருத்துவமனையின் புகழ் பரவியுள்ளது என்றார் ஆளுநர் எம்.கே. நாராயணன்.



மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸுக்கு (வலது) கௌரவ டாக்டர் பட்டத்தை (டி.எஸ்சி.) வழங்குகிறார் மேற்கு வங்க ஆளுநர் எம்.கே. நாராயணன்.

இந்த நிகழ்ச்சியில் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ் பேசியதாவது: மருத்துவ சிகிச்சையின் செலவு மிக அதிகமாக உள்ளதால், புற்று நோய் உள்ளிட்டவற்றுக்கு அனைவரும் சிகிச்சை பெற முடிவதில்லை.

எனவே சிகிச்சை செலவைக் குறைக்கும் வகையில் மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார் டாக்டர் மோகன்தாஸ்.

இந்த நிகழ்ச்சியில் கல்யாணி பல்கலைக்கழக துணைவேந்தர் திலிப்குமார் மொகந்தா, பதிவாளர் உத்பால் பட்டாச்சார்யா, மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.